**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்.**

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.774/2015

**பி.வா.சா.1** வசந்தி

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-**

நானும், சாமியாத்தாள் என்பவரும் சேர்ந்து தாக்கல் செய்த அ.வ.எண்.432/2014 வழக்கில் சுப்பராய கவுண்டரைப் பற்றிய எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டருக்கு 1ம் பிரதிவாதியான குழந்தைசாமி கவுண்டர் ஒரே மகன் என்றும், ராமசாமி கவுண்டர் இறந்தபிறகு அந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான குழந்தைசாமி அந்த வழக்குச் சொத்தின் முழுஉரிமையாளர் என்று சொல்லி அ.வ.எண்.432/2014 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாதி சொத்து மட்டும் தான் பாத்தியம் என்று சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்த அ.வ.எண்.432/2014 வழக்கில் குழந்தைசாமி கவுண்டரும், சுப்பராய கவுண்டரும் பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

எந்த வருடம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அந்த விவரம் தெரியாது. அவர்கள் பாகம் பிரித்துக்கொண்டதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் வாய்மொழியாகத் தான் பாகம் பிரித்துக்கொண்டார்கள் பட்டா உள்ளது. அந்த வாய்மொழி பாகப்பிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அப்போது நான் சிறுவயதாக இருந்ததால் நேரடியாக தெரியாது. அ.வ.எண்.432/2014 வழக்கிலும் சுப்பராய கவுண்டரும், குழந்தைசாமி கவுண்டரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.432/2014 வழக்கின் பிராது நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்துக்கள் பிதுராஜித சொத்துக்கள் என்று தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். வழக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினை ஆகவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்துத் தான் முன்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**